சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 97/2017

பெயர். திரு. வெற்றிவேல் (எ) வெற்றி வேல் முருகன் நாள் 17.06.2026
த/பெ. கோவிந்தசாமி

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் MA. B.Ed. படித்துள்ளேன். எங்கு வேலை செய்தேன் என்றால் வில்வராயன் நல்லூரில் உள்ள சுபம் பள்ளியில் தற்காலிக தமிழ் ஆசிரியராக பணிபுரிந்தேன். எங்கு போகும் போது என்ன ஆனது என்றால் ஸ்ரீபெரும்பத்தூரில் பள்ளி மாணவர்களை அழைத்து செல்லும் போது சிலிண்டர் லாரி என்னை இடித்துவிட்டது. முதலில் நான் ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு எத்தனை நாள் இருந்தேன் என்று எனக்கு நினைவில்லை. அதன் பின்பு மேல் மருவத்தூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எவ்வளவு செலவு ஆனது என்றால் 30 லட்சம் ஆனது. பள்ளி முதல்வர் தான் அந்த செலவை செய்தார். அதற்கான இரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. நிறைய இரசீதுகள் காணாமல் போய்விட்டது. மனுவின் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகைகள் மிக அதிகம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் சிலிண்டர் ஏற்றி வந்ததற்காக வேறு ஒரு காப்பீட்டு

நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் தர கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் அதிகபடியான நஷ்ட ஈடு கோரியுள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை